## DEPOSITION OF WITNESS

## In the Court of Judicial Magistrate No.II, Mettur

**Case No : STC 717/2022**

**Prosecution witness : PW6** **Date : 16.06.2023**

| | |
|---|---|
| **Name : ஜெயச்சந்திரன்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் சாம்பள்ளியில் குடியிருந்து கலைமகள் பள்ளியில் ஆசிரியராக வேலை செய்கிறேன். கடந்த 2 வது மாதம் 2022–ம் ஆண்டு இரவு 9 மணி சுமாருக்கு நான் கருமலைக்கூடல் பவித்ரா ஹோட்டல் அருகில் இருந்தபோது, நான் உணவருந்திவிட்டு வெளியே வரும்போது, லாரி ஒன்று இருசக்கர வானத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டது. சம்பவத்தை நான் விபத்து நடந்த பிறகு சிறிது நேரம் கழித்து பார்த்தேன். லாரி ஓட்டுநரை நான் பார்க்கவில்லை.

2) விபத்து காரணமாக காயமடைந்த நபரை மேட்டுர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தோம். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

3) சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்து சம்மந்தமாக நான் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். விபத்தில் காயமடைந்தவர் மது அருந்தியதால் அவர் தானாக விபத்தினை ஏற்படுத்திகொண்டார் என்றால் சரிதான். விபத்தில் இறந்த பழனிச்சாமி என்பவரை எனக்கு 10 ஆண்டுகளாக தெரியும். அவர் அடிக்கடி மது அருந்திவிட்டு செல்வதால் இது போன்ற விபத்து ஏற்பட வாய்ப்புள்ளது. யாருடைய கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது.

மறுவிசாரணை இல்லை.

ஓம்/–தே.மயில்சாமி,
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**மேட்டுர்.**